Registered as a Newspaper

NEW MASTER
INSTITUTE
241, Navalar Road, Jaffna
89 A/L
ZOOLOGY
Sat & Sun - 8.30 a.m.
விலங்குப்பாகு பாட்டியல்
Sat. & Sun. 11-30 a. m.
சிறுநீர் சனனித் தொகுதி
ஆசிரியர்:
திரு. நாகநாதன்

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ 2/-

NEW MASTER
INSTITUTE
241, Navalar Road, Jaffna
89 A/L
PHYSICS
நிலை மின்னியல்
ஆசிரியர்:
திரு. வர்ணம்
ஆரம்பம்;
03-09-1988
Sat - 2.30 p.m.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆூ ஆவணி மீ 15 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1408 முஹர்ரம் பிறை 17 ( 31 - 08 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 171

# சென்னையில் கைதானவர்களை பலாலி கொண்டுவரத் திட்டமா?

## பூஸாஉண்ணாவிரதிகள் கண்நோயினால் அவதி

### வாசுதேவனின் நிலை மிகக் கவலை

யாழ்ப்பாணம், ஆக. 31

பூஸா தடுப்பு முகாமில் இரண்டாம் கட்ட சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருப்போர் கண்நோயினால் அவதிப்படுவதாகத் தகவல் கிடைத்துள்ளது.

இதே வேளை பூஸா முகாமில் உள்ள வேறு பலரும் கண் நோய்க்கு ஆளாகி உள்ளனர்.

சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தின் முதற் கட்டமும். இரண்டாம் கட்டமும் தொடர்ந்துகொண்டிருக்கின்ற போதிலும் முதற் கட்டத்தில் பங்குபற்றும் உண்ணாவிரதிகளில் செல்லையா வாசுதேவ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருளைப் பெற இவர்கள் 'கியூ'வில் நிற்கத் தேவையில்லை

அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள எரிபொருள் நிலையங்களில் வரிசையில் நிற்கத் தேவையில்லை.

சகல எரிபொருள் நிலைய முகவர்களுக்கும் இது குறித்து அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்தியாவசிய பிரிவுகளின் அதிகாரிகள் எனத் தம்மை அடையாளம் காட்டுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கி எரிபொருள் வழங்குமாறு சகல எரிபொருள் முகவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அத்தியாவசிய சேவைகள் தாமதமின்றி. நடைபெற இது உறுதுணையாக இருக்கும் எனப் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளுக்கு சம்பந்தப்பட்டவர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (ஒ-10)

## எதிர்ப்புக் குரல் கொடுக்க தமிழக மக்களுக்கு நெடுமாறன் அழைப்பு

— சென்னையிலிருந்து தி. மேனகன் —

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், சென்னையில் கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் 154 பேர்களையும் பலாலி இராணுவ முகாமுக்கு கொண்டு வர இந்திய அரசு முடிவு செய்துள்ளதா?

இந்திய அரசு இவ்வாறு ஒரு முடிவுக்கு வந்திருப்பதாகத் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாக தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. ப. நெடுமாறன் இங்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

அரசின் இந்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து. தமிழக மக்கள் சகலரும் ஒன்று திரண்டு எதிர்ப்புக் குரல் கொடுக்க வேண்டும் என்றும் அவர் தமது அறிக்கையில் கோரியுள்ளார்.

திரு நெடுமாறன் விடுத்து உள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளை இலங்கையில்உள்ள பலாலி இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்ல இந்திய அரசு முடிவு செய்திருப்பதாகத் திடுக்கிடும் தகவல் கிடைத்துள்ளது.

விடுதலைப் புலிகளின் தளபதிகளான புலேந்திரன், குமரப்பா மற்றும் 12 பேர்கள் இதே பலாலி இராணுவ முகாமில் சிங்களவரின் சித்திரவதைக்கு ஆளாகி உயிர்த் தியாகம் செய்த துயர நிகழ்ச்சியை தமிழர்கள் இன்னும் மறந்து விடவில்லை.

**பலி பீடத்துக்கா?**

அந்த வேதனை தீருவ தற்குள் தமிழகத்தில் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளைப் பலாலி பலி பீடத்துக்கு அனுப்ப இந்திய அரசு

(6 ஆம் பக்கம் பார்க்க)

இந்திய நகரங்களில்

## குண்டுத் தாக்குதல் செய்தி இலங்கை அரசின் புனைகதை

### விடுதலைப் புலிகள் மறுப்பு

லண்டன், ஆக. 30

இந்திய நகரங்களில் வெடி குண்டுகளை வெடிக்க வைக்கப்போவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் விடுத்ததாகக் கூறப்படும் பயமுறுத்தல் செய்தியை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மறுத்துள்ளது.

செய்தித்துறைக்கு வழங்கிய அறிக்கை ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இம் மறுப்பைத் தெரிவித்திருப்பதாக பி.பி.சி. தமிழோசை நேற்று அறிவித்தது.

விடுதலைப் புலிகளின் அறிக்கை வருமாறு:-

கொழும்பில் இருந்து பிறந்து உருவாகி அடிபடும் இத்தகைய செய்திகள் பொய்யானவை, உண்மைக்குப் புறம்பானவை, விஷமத்தனமானவை, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் குணநலன் வடிவத்தைக் கறைபடுத்தும், களங்கப்படுத்தும் நோக்கத்தோடு அமைந்தவை.

இந்திய மக்களைக் குழப்பும் விதத்தில், அந்த நோக்கோடு இலங்கை அரசு வேண்டும் என்றே புனைந்த வேலை இது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம். பாசத்தோடும், அன்போடும் மதித்துப் போற்றும் இந்திய மக்களின் உயிர்களுக்கோ உடமைகளுக்கோ தீங்கு விளைவிக்கும் எத்தகைய நடவடிக்கைகளிலும் இறங்காது.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக பி. பி. சி. செய்தியாளர் மார்க்டலி புதுடில்லியில் இருந்து அனுப்பிய செய்தியில் தெரிவித்திருந்தார். (அ-எ)

### சுபநேரம்

31 - 08 - 88
ஆவணி — 15
புதன்கிழமை

சுபநேரம்:
04 35முதல் 06.05வரை
ராகுகாலம்:
12 05முதல் 01.35வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

ஈழத்தமிழரைக் கைது செய்ததை ஆட்சேபித்து

## தமிழகம் முழுவதும் இன்று ஆர்ப்பாட்டம்

சென்னை, ஆக 31

தஞ்சம் புகுந்த ஈழத் தமிழர்களைக் கைது செய்து சிறையில் அடைத்திருப்பதை கண்டித்து இன்று புதன்கிழமை அமைதி வழியிலான ஆர்ப்பாட்டங்களை தமிழகத்தின் மாவட்ட தலை நகரங்களில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி செய்துள்ளது.

இது தொடர்பாக தி. மு. க. இளைஞர் அணி அமைப்பாளர் கூட்டம் மாநில அமைப்பாளர் மு. க. ஸ்டாலின் தலைமையில் நடந்தது

பின்வரும் தீர்மானம் அக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது:-

இலங்கைப் பிரச்சினையை பிரதமர் ராஜீவ்

(6 ஆம் பக் ம் பார்க்க)

## தற்போது தேர்தல் நடத்தினால் குழப்பமான சூழ்நிலை உருவாகும்

### ஈரோஸ் பாலகுமார் கருத்து

யாழ்ப்பாணம், ஆக 31

தமிழீழ விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியாகத் தனிமைப்படுத்தி. வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதன் மூலம், இயக்க மோதல்களை மேலும் அதிகரித்து மிகவும் குழப்பமான சூழ்நிலையை உருவாக்கும் அபாயம் ஏற்படும்.

இவ்வாறு ஈரோஸ் இயக்கத்தின் முக்கிய பிரமுகர் திரு வே. பாலகுமாரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

வடக்கு- கிழக்கு மாகாண சபைத்தேர்தல் சம்பந்தமாக வெளியாகி வரும் செய்திகள் குறித்துக் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இந்தத் தேர்தல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



கண் நோய் வந்தால் என்ன, 'கோமா' வந்தால் என்ன தமிழர்களின் வேட்டைபற்றி அதி உத்தமருக்கு என்ன அக்கறை...?

## இந்தியாவிடம் மாற்றுத்திட்டம்

### ஈ. பி. ஆர். எல். எவ். சமர்ப்பித்தது

— உதயன் மட்டக்களப்பு மாவட்டச் செய்தியாளர் —

மட்டக்களப்பு ஆக 31

சமாதானம், ஜனநாயகம் ஆகியவற்றை நிலைக்கச் செய்வதற்காக மாற்றுத்திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளோம். அதனை எழுத்து வடிவில் இந்தியாவிடம் ஒப்படைத்தும் உள்ளோம்.

அதனை ஏற்றுஇந்தியா அதன்படி செயற்படுமானால் அது தமிழ் மக்களின் நலன்களை மட்டுமல்ல, இந்தியாவின் நலன்களையும் பாதுகாப்பதாக அமையும்.

-இப்படிஈ.பி ஆர்.எல். எவ். முக்கியஸ்தர்களில் ஒருவரான திரு. பி. வரதராஜப்பெருமாள் உதயனுக்கு அளித்த பேட்டியில்தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

வடக்கு-கிழக்கு மாகாணசபை தேர்தல் எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பு நடைபெறும். அதற்கிடையில் பட்டிருப்பு தொகுதி இடைத் தேர்தல் நடைபெறும். இத்தேர்தல்களில் நாம் கலந்து கொள்வோம்.

**மக்கள் பிரதிநிதிகள் தேவை**

தமிழ் மக்களின் பிரச்சினைகுறித்து இலங்கை-இந்திய அரசுகள் தான்

(5-ம் பக்கம் பார்க்க)

## பூஸா செல்பவர்கள் பெயர்களைப் பதியலாம்

யாழ்ப்பாணம் ஆக 31

பூஸா முகாமில் உள்ள தமிழ்க் கைதிகளைப் பார்வையிட விரும்பும் உறவினர் இன்று முதல் நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

இதற்கான ஏற்பாடுகளை வடக்கு, கிழக்கு பிரஜைகள் குழுக்களின் இணைப்புக்குழு மேற்கொண்டுள்ளது.

இதேவேளை பூஸா முகாமுக்குச் செல்லும் ஒவ்வொருவருக்கும் பண உதவி வழங்க றெட்பானா ஸ்தாபனம் முன் வந்துள்ளது.

சம்பந்தப்பட்ட கைதி ஒருவரை அவரது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் மட்டுமே பார்ப்பதற்கு அனுமதி வழங்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஞாயிறன்று பகலில் மின்சாரம் இல்லை

எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் காலை 8 மணி முதல் மாலை 5மணிவரை மின் விநியோகம் தடைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மகனை விடுவிக்கக் கோரி பெற்றோர் வீட்டின் முன் உண்ணாவிரதம் இருக்கின்றனர்

காங்கேசன்துறை, ஆகஸ்ட் 31

அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்ட தமது மகனை விடுவிக்கக்கோரி, பெற்றோர் தமது வீட்டுக்கு முன்னால் உண்ணாவிரதம் அனுஷ்டிக்க ஆரம்பித்துள்ளனர்.

இது குறித்துத் தெரிய வருவதாவது:

காங்கேசன்துறை, ஊறணியைச் சேர்ந்த கனகரத்தினம் குணாளன் என்பவர் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின் மாணவன் ஆவார். அவர் கடந்த 2ஆம் திகதி அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்டு இதுவரை விடுதலை செய்யப்படவில்லை.

மாணவனின் பெற்றோர் அமைதிப்படை உயர் அதிகாரிகளுக்கு இது தொடர்பாக விண்ணப்பித்தும் பலன் எதுவும் கிடைக்கவில்லை.

இதனை அடுத்து மாணவரின் தாயும், தந்தையும் உடனடியாக இவ்விடயம் குறித்து ஆவன செய்து தமது மகனை விடுவிக்குமாறுகோரி தம் வீட்டுக்கு முன்னால் நேற்று முதல் உண்ணாவிரதம் அனுஷ்டிக்க ஆரம்பித்தனர்.

விரைவில் இம்மாணவன் விடுதலை செய்யப்படாத விடத்து ஊர் மக்கள் இணைந்து பெரும் சாத்வீகப் போராட்டம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக உதயனுக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக மாணவனின் தந்தையார் காங்கேசன் துறை (தையிட்டியில்) உள்ள அமைதிப்படை பொறுப்பதிகாரியிடம் மகஜர் ஒன்றையும் சமர்ப்பித்துள்ளார். (ஒ-63)

## காப்புறுதிக் கூட்டுத்தாபன யாழ்.கிளையை மூட உத்தரவு

### 42 ஊழியரும் கொழும்புக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஆக 31

தற்போது இயங்காத நிலையில் இருந்து வரும் யாழ். காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் 42 தமிழ் ஊழியர்களையும் கொழும்புக்கு இடமாற்றம் செய்ய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைமையகம் முடிவு செய்துள்ளது.

இதற்கானகடிதத்தை பிராந்திய அலுவலகங்களுக்கான முகாமையாளர் திரு. ஜோசப்சில்வா யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்துள்ளார்

இது தொடர்பாக காப்புறுக் கூட்டுத்தாபனத்தின் உயர்அதிகாரி ஒருவர் தகவல் தருகையில் கூறியதாவது:-

யாழ் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கடந்த ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதியில் இருந்து மூடப்பட்ட நிலையில் உள்ளது.

காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இயங்காத

(6 ஆம் பக்கம் பார்க்க)

J. M. J.

இடமாற்றம்

எமது புதிய முகவரி

உங்கள் பயண அமைப்பாளர்

S.P. ANTON

No. 648 1/3 ஆஸ்பத்திரி வீதி,
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)

யாழ்ப்பாணம்.

(6256)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த வீட்டுத் தளபாடங்கள், குளிர்சாதனப்பெட்டி, அலுமாரி, கட்டில், Show - Case, கண்ணுடிமேசை, Office மேசை, சாப்பாட்டு மேசை, கதிரைகள், விருந்தைக் கதிரைகள், பலவித பித்தளைப் பொருள்கள், Steel அலுமாரி, மெற்றல் கதிரைகள் மற்றும் பலவிதமான பொருள்களும் மிகவும் மலிவுவிலையில் உடன் விற்பனைக்கு உண்டு. M. தியாகராஜன், 326, பிரதானவீதி, யாழ்ப்பாணம். (சென். பற்றிக்ஸ் சந்தியருகில்.) (5995)

### இறைச்சிக் கோழிகள்

Broiler இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். தொடர்பு: Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (C-6063)

### Dolly Tea
### டொலி தேயிலை

அதிக சுவை, கூடிய சாயம், நறுமணம், இலவச ஸ்ரிக்கர் இத்தனைக்கும் உடனே நாடுங்கள்:- டொலி தேயிலை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலாசம்:- டொலி, கல்வயல் வீதி, நுணுவில் கிழக்கு, சாவகச்சேரி. (5660)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohmann வெள்ளை சிவப்புப்பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், Hy-Line கறுப்பு வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன் கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர் (சி/6066)

### மைசூர் No.1 அரிசி விற்பனை

மிகவும் கைதேர்ந்த தொழிலாளர்களால் சுகாதார முறைப்படி அதிநவீன இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப்பட்டு விற்பனையாகிறது No.1 அரிசி. சகலதேவைகளுக்கும் கல் இல்லாத சுத்தம், சுவை, தரம் நிறைந்த மைசூர் No. 1 அரிசியையே உங்கள் அருகாமையிலுள்ள கடைகளில் வாங்கிப் பாவியுங்கள். தயாரிப்பாளர்: மைசூர் அரிசி ஆலை, சுதுமலை, மானிப்பாய். (5807)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C6107)

## தேவை

பனை ஓலைச் சார்வுகள் தேவை. தொடர்பு கொள்க: மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், 525/2, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C/ 6450)

## மணமகன் தேவை

31வயது நிரம்பிய 2இல் செவ்வாய் பாவமுள்ள 5' 5'' உயரமும் நற்குணங்களும் பொருந்திய பெண்ணுக்கு மணமகன் தேவை. பொறியியலாளர், கணக்காளர் அல்லது Bankஇல் உயர் பதவியில் உள்ளவர்களை எதிர்பார்க்கின்றார்கள். தகுதியைப் பொறுத்து தகுந்த சீதனம் கொடுக்கப்படும். தொடர்பு; ST 349, C/o உதயன், யாழ்ப்பாணம். (6209)

### தவறிவிட்டது

அழகுசேகரம் சிவலிங்கம் ஆகிய எனது அடையாள அட்டை 540363900V சாவகச்சேரி மார்க்கட்டில் 16 .8. 88 அன்று தவறிவிட்டது. இத்துடன் I. P. K. F பாஸும் உள்ளது. இதைக் கண்டெடுத்தவர்கள் ராஜ் வேல்ஸ் புடைவைக் கடையில் ஒப்படைக்கவும். (6074)

## வாடகைக்கு

சுண்டுக்குளி மகளிர் பாடசாலைக்குக் கிட்டவாக மாணவிகளுக்கு சாப்பாடு வசதியுடன் அறை வாடகைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும் விளம்பர, இல. 183, C/o உதயன், நாவலர் றோட், யாழ்ப்பாணம். (6078)

நெல்லியடிச் சந்திக்கு அருகில் அமைந்துள்ள (கராஜ்) இரும்புத் தொழிற்சாலை வாடகைக்குக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; நியூட்டன் றிவைன்டிங் வேர்க்ஸ், நெல்லியடி பஸ்நிலையம் முன்பாக நெல்லியடி. (6064)

## A/L 89
## பகல் நேர வகுப்பு

10.30: காவிகள்
11.45: திரிகோண கணிதம்

ஆரம்பம்: 05-09-1988

ஆசிரியர்: திரு. ரவிமோகன்

யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)
(6069)

### கல்வி
### A/L 89, 90

பிரயோக கணித படிமுறைப் பயிற்சிநூல் 'காவியும் அதன் பிரயோகங்களும்' வெளிவந்துவிட்டது. A/L நான்கு வினாக்களுக்குப் பயிற்சியளிக்கும் பூரண பயிற்சி நூல் பல புதிய வினாக்களுட்பட 125 வினாக்களைக் கொண்டது. யாழ், கொழும்பு, மட்டக்களப்பு நகர புத்தக விற்பனை நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம். ஆசிரியர்:- சி. துரையப்பா. (6208)

### பயிற்சி வகுப்புக்கள்

கேக் 'செய்முறை'— ஐசிங், ஜெனரல் குக்கரி வகுப்புக்கள் பயிற்றுவிக்கப்படும். இன்று மாலை 4-30 மணியளவில் ஆரம்பமாகின்றன. 2½ மாத வகுப்புக்கள். 11/2 வைமன் வீதி, நல்லூர். (6214)

### பிரெஞ்ச் மொழி

1988 ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க விசேட "பிரெஞ்ச் மொழி" வகுப்புக்கள் சலுகைக் கட்டணத்தில் 1- 9 . 88 இல் ஆரம்பமாகின்றன. விபரங்களுக்கு:- "Alliance Francaise De Jaffna" (யாழ்/ பிரெஞ்சிய நட்புறவுச் சங்கம்) 130, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [5929]

### TOEFL வகுப்புகள்

இலவச மாதிரி வினாப் பத்திரங்களுடன் நடைபெறுகின்றன. சனி, ஞாயிறு காலை 10/30—12/30, திங்கள், புதன் காலை 8/30—10/30 தொடர்புகொள்க: S.B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (6062)

### CITY CENTRAL CLINIC

294, நாவலர் வீதியில் இயங்கி வந்த சிற்றி சென்றல் கிளினிக் 202, கோவில் வீதி, கைலாசபிள்ளையார் கோவில் முன்பாக மீண்டும் திறக்கப்பட்டு விட்டதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம் Dr A. கதிர்காமநாதன். (6076)

### சோதிட மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம், ஜாதகபலன் விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில் விருத்தி, மங்கள மணவாழ்வு, மனையில் இலக்குமி கடாட்சம், நோய்பிணி தீரல், சத்துருஜெயம், கிரகதோஷம் முதலான மாந்திரீக விடயங்களுக்கும் நாடுங்கள். 'சக்தி சரவண' (அரச அங்கீகாரம் பெற்ற சோதிடரும், மட்டக்களப்பு பாரம்பரிய - பரம்பரை மாந்திரீக நிபுணரும்) 210, கஸ்தூரியார் வீதி, (யாழ்/ இந்துக்கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். (6211)

### நன்றிநவிலல்

கலட்டி முதலுதவியாளர்களுக்கு, பொ. அருந்தவராசா, ந. தவச்செல்வம், த.சுஜீவன், வ.கிருஷ்ணமூர்த்தி, ச. ரஞ்சித் ந. கிருஷ்ணகுமார் மற்றும் விக்கினேஸ்வராசாரணர்களுக்கும் இடைக்காடு மகாவித்தியாலயசாரணர்களுக்கும் செல்வச்சந்நிதி மக்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள். (6210)

## பாலர் ஆசிரியை தேவை

மானிப்பாயில் ஆரம்பிக்கப்படவுள்ள பாலர் பாடசாலைக்கு, பாலர் ஆசிரியைப் பயிற்சி பெற்ற ஆங்கிலம், நடனம், சங்கீதம் ஓரளவுக்குத் தெரிந்த சேவை மனப்பான்மையுமுள்ளோரிடமிருந்து 15–9–88க்கு முன் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சி. விஸ்வலிங்கம்
செயலாளர்.

மானிப்பாய் கோயிற்பற்று
இந்துசமய விருத்திச் சங்கம்
ஆனைக்கோட்டை. (6044)

## தான்தோன்றி மனோன்மணி அம்மன் ஆலயம்
### நாரந்தனை

இளைய இந்துக்கள் ஒன்றியம்
27-8 88 அன்று நடத்திய
அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | | |
|---|---|---|
| 1ஆம் பரிசு | — | 7.1 |
| 2ஆம் பரிசு | — | 385 |
| 3ஆம் பரிசு | — | 382 |

(6075) இளைய இந்துக்கள் ஒன்றியம்

இலங்கை அதிபர்கள் சேவையின் I-ஆம் II-ஆம் III-ஆம் தரங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கான

## போட்டிப் பரீட்சை

1988 ஒக்டோபர் மாதம் நடைபெறவிருக்கும் இப்பரீட்சைக்கான

## 1½ மாத துரித பயிற்சி வகுப்புகள்

பல தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களின் இணைந்த சேவை

**ஆரம்பம்: 3 - 9 - 88**

பாடநெறி:- (I) கிரகித்தல், (II) பொது அறிவு (III) கல்விக் கொள்கையும் நிர்வாகமும்.

★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்.
★ விரிவுரைகள் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும். (பி. ப. 1-4 மணிவரை)
★ கட்டணம் ரூபா 250.00 - (முழுப்பயிற்சிக்கும் தரம் I, II)
★ கட்டணம் ரூபா 200.00 - (தரம் III)

விபரங்களுக்கு: நேரில்/தபாலில்.

**ASTAN INSTITUTE**
166/1 HOSPITAL ROAD - JAFFNA
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1 ஆம் மாடி)
(C/6260)

## கம்பியூட்டர் விரிவுரைகள்

**BASIC**
with practicals
4 MONTHS
WEEKENDS / WEEKDAYS
ஆரம்பமாகின்றன.

பிந்திச் சேர்பவர்களுக்கு விசேஷ பிரத்தியேக வகுப்புகள்.

Fees — மாதம் 250/- மட்டும்

பாதுகாப்பான இடம்

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
(Leaders in Computer Education)
16, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(C 6456)

## லோட்டஸ்
## நைலோன் சைக்கிள் டயர்கள்

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களுக்கு லோட்டஸ் நைலோன் சைக்கிள் டயர்கள், டியூப்களுக்கு

ஏக விநியோகஸ்தர்களாக அங்கீகாரம் பெற்றவர்கள்

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் றோட் 50ஆம் இலக்கத்தைச் சேர்ந்த

**M/s. E. S. பேரம்பலம் & கம்பனியை**

உடனடியாக நியமித்துள்ளோம் என்பதை பொது மக்களுக்கும், வியாபாரிகளுக்கும் அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

அசோஸியேட்டட் றபர் இன்டஸ்றீஸ் லிமிட்டெட்,
நகே றோட், பேலியாகொட.
(C6455)

## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்



திரு. நாகேந்திரம் நடராசா
(இஞ்சினியர், இலண்டன்)

தோற்றம்: 14-1-1930 மறைவு: 22-7-1988

எமது குடும்பத் தலைவரின் அந்திமக் கிரியை 31-8-1988 இன்று புதன்கிழமை பகல் 12-00 மணியளவில் 'அருந்ததி இல்லத்தில்' நடைபெறும். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

மனைவி: திருமதி இ. நடராசா
பிள்ளைகள்: ந. திருக்குமார்
ந. திருச்செந்தில்

'அருந்ததி இல்லம்'
... கோண்டாவில். (6252)

### போக்குவரத்து சீர்குலையும் ஆபத்து

வடமராட்சி ஆக31 வடமராட்சி கிழக்கு வீதிகளின் அவல நிலையால் போக்குவரத்துக்கள் இடைநிறுத்தப்படும் ஆபத்து உருவாகி வருகிறது.

வாகனச் சொந்தக்காரர்கள் பருத்தித்துறை பஸ் டிப்போவில் இது தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளார்கள். (இ- 160)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## பட்டப்பின் படிப்பிற்காகப் பதிவு செய்தல் - 1989

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 1989 கல்வியாண்டின் பின்வரும் பாடநெறிகளுக்கு பட்டப்பின் படிப்பிற்காக தகுதி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருளியல், புவியியல், இந்துநாகரிகம், வரலாறு, சமஸ்கிருதம், தமிழ், மெய்யியல், மொழியியல், கல்வியியல்.

அறிவுறுத்தல்களுடன் சேர்ந்த விண்ணப்பப் படிவங்கள் நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் 24-8-1988இல் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நேரடியாக விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர் பல்கலைக்கழக நிதியாளரிடம் ரூபா 25/- செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவம் பெற வரும்போது சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளரின் பெயருக்கு எழுதப்பட்ட 25 ரூபாவிற்கான காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளையுடன் 5ரூபா 75சதம் பெறுமதியான முத்திரை ஒட்டிய 38×25 ச. மீ. அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் கலைப்பீடாதிபதி அலுவலகத்திலுல் 15-9-1988ஆம் திகதிவரை வழங்கப்படும்.


பூர்த்தி செய்யப்படாத/பிழையான தகவல்களையுடைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 30-09-1988இற்கு முன்பாக கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். 30-09-1988இற்குப் பின்பு வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

உதவிப் பதிவாளர்,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
23-08-1988 (C6458)

## டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®
ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

**தினமும் டியூரோல்® அருந்துங்கள். அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.**

சில்லறை விலை ரூ. 37/50 200 மி. லீ. — Pfizer — சில்லறை விலை ரூ.39/90 200 மி. லீ.
®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவரங்காலில் தேடுதல்

ஆவரங்கால், புத்தூர் பகுதிகள் திங்கட்கிழமை அமைதிப்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

ஆவரங்கால் சந்தி, தோப்பு, நவக்கிரி, சிறுப்பிட்டு, புத்தூர் கிழக்கு ரோட்டு புத்தகலட்டி உட்பட்ட பகுதிகள்முழுமையாக சுற்றிவளைக்கப்பட்டு தேடப்பட்டது.

அதிகாலையில் ஆரம்பமாகிய தேடுதலின் போது சந்தேகத்திற்கு இடமானோர் தடுத்து நிறுத்தப்பட்டு தலையாட்டி முன்னர் நிறுத்தப்பட்டனர்.

உ

## திருமண நன்றி நவிலல்

19. 8. 1988 இல் நடைபெற்ற எங்கள் திருமணத்திற்கு வருகை தந்தவர்கள், வாழ்த்துச் செய்திகள் அனுப்பியவர்கள் அன்பளிப்புக்கள் செய்தவர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

திரு. ச. பாஸ்கரன்
திருமதி பா. புஷ்பலதா
''குமுத வாசம்''
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

மடத்தடிலேன்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (6047)

VACANCIES IN SAUDI ARABIA

We require the following Categories of personal for immediate recruitment.

| CATEGORY | SALARY |
|---|---|
| 1. Auto Electrician | 650+150 FA |
| 2. Mechanic (Desiel & Petrol) | 650+150 FA |
| 3. General Electrician | 750+150 FA |
| 4. Civil Supervisor | 900+200 FA |
| 5. Heavy Equipment Crane Mechanic | 800+100 FA |
| 6. Hvac Technician | 900+100 FA |
| 7. Air Compressor Mechanic | 900+100 FA |
| 8. Technical Manager | — Negotiable |
| 9. Electrician/Electrical Supervisor | — Negotiable |
| 10. Mechanical Supervisor | — Negotiable |
| 11. Telephone Technician | — Negotiable |
| 12. Electronic Supervisor | — Negotiable |

Diploma of I.T.I. Certificates with five (05) years experience.

CALL OVER IN PERSON IMMEDIATELY with Documents and Passport.

சவூதி அரேபியாவிற்கு உடனடி வேலைவாய்ப்பு

1. S. O. M. C
CLEANERS HOSPITAL
(1) ஆண்கள் 456 SR
(2) பெண்கள் 456 SR

2, AIR PORT
CLEANERS 400 + 100 SR
(ஆண்கள்)
வயது 21 — 49 வரை
பெண்கள்
வயது 30 — 45 வரை
இருவாரத்தில் பயணம்

KUWAIT
CLEANERS 30 KD
3 மாதத்திற்குள் பிரயாணம் செய்யலாம்.
வயது 18 — 48 வரை

T. V. Travels & Tourist
Brown Road,
(Railway Station Front)
KOKUVIL.
(C 6458)

யாழ் விவசாயிகளுக்கு

# உழவு இயந்திரங்கள், உபகரணங்கள் இலகு கடன் அடிப்படையில்

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவித் திட்டம்

யாழ்ப்பாணம் ஆக 31

வடபகுதி விவசாயிகளுக்கு நான்கு சக்கர உழவு இயந்திரங்களும், இரண்டு சக்கர உழவு இயந்திரங்களும் மற்றும் தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள், தெளி கருவிகள் ஆகியவை நீண்டகால இலகு கடன் அடிப்படையில் வழங்கப்பட இருக்கின்றன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவித் திட்டத்தின் கீழ் இவை வழங்கப்பட இருக்கின்றன.

இதற்கான ஏற்பாடு களைக்கமநலச்சேவைகள் திணைக்களம் மேற்கொண்டிருக்கிறது.

உழவு இயந்திரங்கள், மற்றும் தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள், தெளி கருவிகள் ஆகியவை யாழ் மாவட்டத்திலுள்ள கமநலச்சேவை நிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

இவற்றை வடபகுதி விவசாயிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ற விதத்தில் இலங்கை அரசு இறக்குமதி செய்யலாம். அதற்கேற்ற விதத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கை அரசாங்கத்துக்குத் தேவையான அளவு கடனை வழங்கும்.

வடபகுதி விவசாயிகளில் பெரும்பாலானோர் இந்த விவசாய இயந்திர சாதனங்களையும், விவசாய உபகரணப் பொருள்களையும் இலகுவில் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக நீண்டகாலக் கடன் அடிப்படையிலும், இலகு கடன் வசதியிலும் இவை வழங்கப்படும்.

வடபகுதி விவசாயிகளுக்கு இறுதியாக 1984ஆம் ஆண்டில் வங்கிகள் வழங்கிய கடன் வசதிகள் ஊடாகவே நான்கு சக்கர, இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

இதே வேளையில் வடபகுதியிலுள்ள கமநலச் சேவை நிலையங்களின் பாவனைக்காக பன்னிரண்டு நான்கு சக்கர உழவு இயந்திரங்களையும், பன்னிரண்டு இரண்டு சக்கர உழவு இயந்திரங்களையும் அரசாங்கம் விரைவில் வழங்கவிருக்கின்றது.

(உ-ஐ)

# ஜே. வி. பியினரின் போராட்டம் தேசிய விடுதலைப் போரின் தொடர்ச்சியே!

## நாடாளுமன்றத்தில் எஸ்.டி.

கொழும்பு, ஆக. 31

எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் தொடர்ச்சியே மக்கள் விடுதலை முன்னணி தற்போது நடத்தி வரும் போராட்டமாகும்

சம்பஹா எம்.பி திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா நாடாளுமன்றத்தில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவசரகால நீடிப்புப் பிரேரணை மீதான விவாதம் சடந்த வாரம் இடம்பெற்றது.

திரு. பண்டாரநாயக்கா மேலும் சொன்னதாவது;

'மாபியா'ரக கோஷ்டி ஒன்று வெளிநாட்டுச் சக்தி ஒன்றின் நிதி உதவியுடன் இயங்குகிறது. ஜே. வி. பியின் பெயருக்கு அபகீர்த்தி உண்டு பண்ணுவதே இக்கோஷ்டியின் நோக்கமாகும்.

ரோஹண விஜய வீராவை நேரில் தெரியாதவர்களே இன்று, ஜே. வி. பிக்காக தியாகம் செய்துவருகிறார்கள். ரோஹண யாரை பிரதிநிதித்துவப்படுத்துகின்றார் என்று அவர்களுக்குத் தெரியும்.

2001 ஆம் ஆண்டின் வளர்ச்சியை நோக்கி வருங்கால சமுதாயம் உலகில் செயற்பட்டு வருவரை உண்ணு விரதம் இருக்கும் 3 தமிழர்களை அரசு புறக்கணித்து விட்டது. இது அவ்வளவாக பிரபலப்படுத்தப்படவில்லை. சத்தியக் கடதாசிகள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அவர்கள் புறக்கணிக்கப்பட்டனர்.

'அரசியல் கைதி' என்பதற்கு அரசுகொடுக்கும் வியாக்கியானம் தான் என்ன?

அமைச்சர் காமினி திஸநாயக்கா:-

புதிய தலைமையில் ஆட்சி ஏற்படுத்தப்பட வேண்டும் என்று திரு. ரெனி டி மெல் பேசுகையில் தெரிவித்தார்.

யு. என். பி. புதியதலைமையின் கீழ் தான் புதிய அரசாங்கத்தை நிறுவப் போகிறது.

புதிய தலைமை வேண்டும் என்ற திரு. டி மெல், யார் அந்தப் புதிய தலைவர் என்பதை ஏன் கூற வில்லை? (உ-எ)

ஆனால் எமது நாட்டிலோ பல்கலைக் கழகங்கள் மூடப்பட்டுள்ளன. பாடசாலைகள் சிலவும் மூடப்பட்டு உள்ளன. மாணவர்கள் சிறையில் அடைபட்டுக் கிடக்கின்றனர்.

—இப்படி திரு. பண்டாரநாயக்கா சொன்னார்

மஹரகம எம்.பி. திரு. தினேஷ் குணவர்த்தின:-

அவசரகாலச் சட்டம் 64 ஆவது தடவையாக நீடிக்கப்பட்டுள்ளது.

### மின்கம்பங்களுக்கு மட்டும் இல்லை

பிரதி அமைச்சர் மெரில் காரியவாசம்:-

சட்சி மாறிய திரு. ரெனி டி மெல் இன்று வேலையில்லாத்திண்டாட்டம் பற்றிப் பேசுகிறார். ஆனால் அவர் முன்னர் பிரதிநிதித்துவம் செய்த தெவிநுவர தொகுதியில் மின்கம்பங்களுக்கு மட்டும் தான் வேலை வழங்கப்படவில்லை மற்றவர் அனைவருக்கும் வங்கிகளில் வேலை வழங்கப்பட்டுள்ளது.

### அநுரா பேச்சு

எதிர்ககட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா:-

பூஸா முகாமில் சாகும் வரை

கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு

# பக்தர்கள் நள்ளிரவில் கூடியிருக்க அனுமதி

## வல்லிபுர ஆலய சபை ஏற்பாடு

யாழ்ப்பாணம் ஆக 31

கிருஷ்ண ஜெயந்தி விழாவைக் கொண்டாடுவதற்காக ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் நள்ளிரவில் பக்தர்கள் கூடியிருக்க இந்திய அமைதிப்படையினர் அனுமதி வழங்கியிருக்கின்றனர்.

கிருஷ்ண ஜெயந்தி விழா எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு வழமை போல் சிறப்பாக நடைபெறும் என கோவில் தர்மகர்த்தா சபையினர் தெரிவித்தனர்.

பக்தர்கள் மாலை 7 மணிக்கு — ஊரடங்கு நேரத்திற்கு முன்னர் ஆலயத்திற்கு வந்து விடவேண்டும் எனவும்-

அடுத்த நாள் காலையில் பக்தர்கள் வீடுகளுக்குத் திரும்பலாம் என்றும் தர்மகர்த்தா சபையினர் மேலும் தெரிவித்தனர்.

கிருஷ்ண ஜெயந்தி தினத்தன்று ஆலயத்தின் ஐந்து மைல் சுற்றுடல் எல்லைக்குள் ஊரடங்குஉத்தரவைத் தளர்த்தச் செய்யும் முயற்சியில் தர்மகர்த்தா சபையினர் [illegible] றனர்.

(உ-128)

### யூனியனிலிருந்த 22 பேர் தெரிவு

அச்சுவேலி, ஆக, 31

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இருந்து இம்முறை 22 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

வர்த்தகப் பிரிவுக்கு எட்டுப்பேரும் கலைத்துறைக்கு ஐவரும், உயிரியல் விஞ்ஞானத் துறைக்குநால்வரும்முகாமைத்துவம், பௌதிக விஞ்ஞானம் ஆகிய துறைகளுக்குத் தலா இருவரும், விவசாய விஞ்ஞானத்துறைக்கு ஒரு மாணவனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறைக் கல்வி வட்டாரத்தில் இம்முறை ஆகக் கூடுதலான மாணவர்கள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (உ - 11)

கோப்பாய்- கைதடி பாதையருகே

# மந்தை மேய்க்கும் வெளி கழிவுக் கூடமாகின்றது

கோப்பாய் ஆக 31

கோப்பாய் - கைதடி பாதையின் அருகிலுள்ள மந்தை மேய்க்கும் வெளி சழிவுப் பொருட்களை இடும் இடமாக விரைவாக மாறி வருகின்றது.

இவ்வாறுக சழிவுப் பொருட்களில் தகரத் துண்டுகள், கண்ணுடிப் போத்தல்கள் என்பன பெருமளவில் அடங்கியுள்ளன.

- இவ்வாறு சழிவுப் பொருட்களைக் கொண்டு வந்து குவிப்பவர்களைத் தடுக்காவிடில் இப் பிரதேசத்தில் மந்தை மேய்க்க முடியாது போய் விடும் என்று இப் பகுதி பொது மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

(உ-72)

# பெண்களின் கண்ணீரைத் துடைப்பதில் ஆறுதல் காண்கிறது சேவாச்சிரமம்

## சுவாமி சித்ரூபானந்தா பேச்சு

பருத்தித்துறை, ஆக. 31

அன்னை சாரதாதேவி வேறு யாருமல்ல, பராசக்திதான். அவர் வாழ்ந்த காலத்தில் தன்னை நாடி வந்தவர்களுக்கு ஆதரவு கொடுத்தது போலவே இன்று பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதாசேவாச்சிரமம் இராணுவக் கெடுபிடிகளால் விதவைகளாக்கப்பட்ட பெண்களின் கண்ணீரைத் துடைப்பதில் ஆறுதல் காண்கின்றது.

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் இருபது ஆண்டு நிறைவை முன்னிட்டு சேவாச்சிரமத்தில் நடைபெற்ற விசேடவழிபாட்டின்பின்னர் சொற்பொழிவாற்றிய சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா இவ்வாறு குறிப்பிட்டார்.

சடந்த வெள்ளிக்கிழமை மருதடி ஞான வைரவர் கோவிலிலிருந்து நூற்றுக்கணக்கான பக்தர்கள் சுவாமி ஸ்ரீராம கிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதாதேவி ஆகியோரின் உருவப் படங்களை ஊர்வலமாக பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதாசேவாச்சிரமத்திற்கு எடுத்துவந்தனர்.

வீதியெங்கும்மாவிலைத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. வல்லிபுர வைத்தியர் வீதியால் ஊர்வலம் செல்லும்போது வழி நெடுகிலும் கும்பங்கள் வைத்து வழிபாடு நடைபெற்றது. பக்தர்களின் தேவாரப் பண்ணிசை கூட்டுவழிபாட்டுடன் ஊர்வலம் சேவாச்சிரமத்தை வந்தடைந்தது.

அங்கு சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தாதொடர்ந்து பேசியபோது கூறியதாவது:

வெறும்சடங்குகளினால் கடவுளை அடைய முடியாது. உண்மையான இரக்கம், மனப்பூர்வமாகக் கடவுளை நாடுதல் இவை மிகமிக அவசியம். சமயத்தை அனுஷ்டானத்தில் கொண்டு வரும்பொழுது கடவுளுக்கு மிக அண்மித்து விடுவோம். இதுதான் தற்காலத்தில் நாம் செய்யவேண்டிய தலையாய பணி என்றார்.

இருபதாண்டு நிறைவு விழாவின் இறுதியில் யாழ் மாவட்டத்தில் இராணுவக் கெடுபிடிகளினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தவர்களுக்கு பால்மா, புடைவை, அரிசி, சீனி, பாடசாலைச் சீருடை, பாடசாலை உபகரணங்கள் அடங்கிய சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

அத்துடன் விழாவிற்குச் சமுகமளித்தவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

(இ-118)

# ஆசிரியர்களுக்கு பயிற்சி வகுப்பு

இலங்கை அதிபர்கள் சேவை தரம் I, II, IIIக்கு அதிபர்களைத் தெரிவதற்கான போட்டிப்பரீட்சைக்கு ஆசிரியர்களைத் தயார் செய்யும் — நெறிப்படுத்தல் பயிற்சி வகுப்புக்களை— தென்மராட்சி அதிபர்கள் சங்கம் நடத்தவுள்ளது.

ஒவ்வொரு வாரஇறுதி நாட்களிலும் விடுமுறை நாட்களிலும் முழுநாள் வகுப்பாக இது நடத்தப்படும்.

இவ்வகுப்புக்கள் செப்டம்பர் 10 ஆம் திகதி தொடக்கம் அக்டோபர் 9 ஆம் திகதிவரை நடைபெறும்.

முற்றிலும் சேவை நோக்கில் இலவசமாக நடத்தப்படவுள்ள இவ்வகுப்புக்களுக்கு யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் ஆசி வழங்கியுள்ளார். (உ-119)

உயரிய உழைப்பு உச்ச இலாபம்



புறஉடற் கூட்டை மரத்தால் அமைத்துத்தரும் வசதியும் உண்டு.

அடித்தளம் ரூபா: 450,000/- முதற்கொண்டு.

லால் கொமெற் சுப்பர் லாரி

★ சுமை ஏறக 224'' இடவசதி.
★ 9½ தொன் பாரம் ஏற்கும் சக்தி
★ எரிபொருள் செலவீட்டில் அதிகண்டிப்புக் காட்டுவோரையும் திருப்திப் படுத்தும் அளவு சிக்கனம்.
★ லேலண்ட் அம்சமான உறுதிசெய்யப்பட்ட நீண்டகால உழைப்பு.
★ பராமரிப்பு அறிவுரை திருத்தவேலைகளுக்குத் தொழிற்சாலைப் பயிற்சி பெற்ற பொறியியலாளர் மற்றும் சிப்பந்திகளின் சேவை உதவி.
★ தேர்ந்தெடுக்கக் கொன்ஸ்ரண்ற்மெஷ் அல்லது மலைநாட்டுப் பகுதிக்கு உகந்த சிங்க்ரோமெஷ் என இருவகை கியர் முறைகள் உண்டு

லால் கொமெற்-நாளும் பணம் பெருக்க நம்பகமான பங்காளன்

நிதியக் கடன்/குத்தகைக் கடன் வசதிகள் பற்றி எம்மிடம் விசாரிக்கவும்

லங்கா அசோக் லேலண்ட் லிமிட்.
38 - 40, எட்வட்ஸ் லேன், டுப்ளிகேஷன் வீதி, கொழும்பு 3.
(பௌத்தாலோக்க மாவத்தச் சந்தியருகில்)
தொலைபேசி 502286.

லால் ஸ்பெயர் பாட்ஸ் சென்ரர்.
241, பஞ்சிகாவத்த ரோட், கொழும்பு 10.

GPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மாவட்டத்தில் சீர்கெட்டு வரும் வீதிகள்

## புனரமைப்புக்குப் போதிய நிதி இல்லை

மாங்குளம் ஆக 31 முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வீதிகள் தொடர்ந்தும் சீர்கெட்டு வருகின்றன. வீதிகளில் காணப்படும் குன்று, குழி என்பனவால் போக்குவரத்துப் பாதிக்கப்படுகின்றது. பாதசாரிகள் கூடச் செல்ல முடியாத அளவுக்கு வீதிகள் சீர்கெட்டுக் காணப்படுகின்றன.

குறிப்பாக பரந்தன்-முல்லைத்தீவு வீதி, மாங்குளம்- முல்லைத்தீவு வீதி, தண்ணுக்காய்- முல்லைத்தீவு வீதி, புளியங்குளம்- முல்லைத்தீவு வீதி ஆகிய வீதிகள் முல்லைத்தீவுக்குச் செல்லும் பிரதான வீதியாகவும் ''ஏ'' வகுப்பு வீதியாகவும் உள்ளன. இருந்தும் இவை சேதமுற்று மோசமான நிலையில் காணப்படுகின்றன.

சில வீதிகள் மண் வீதியாக மாறி வருகின்றன. இது குறித்து சம்பந்தப்பட்ட உயர் அதிகாரியிடம் வினவிய போது- இவ்வீதிகள் உடனுக்குடன் திருத்தப்பட்டு தினமும் பராமரிக்கப்பட வேண்டுமென்றும், இதற்குப் போதியளவு நிதி ஒதுக்கப்படவில்லையென்றும் தெரிவித்தார்.

1987 ஆம் ஆண்டு வீதித் திருத்தத்திற்கு ரூபா 25 இலட்சம் ஒதுக்கப்பட்டது. ஆனால் இவ்வருடம் ரூபா 17 இலட்சம் மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அதுவும் அந்தந்த வருடங்களில் மழையினால் சேதமடைந்த வீதிகளைத் திருத்தம் செய்வதற்கு மட்டுமே நிதிஒதுக்கப்பட்டிருக்கிறது.

மேற்கொண்டுவீதிகளைச் செப்பனிட நிதி பற்றாக் குறையாக இருப்பதால் வீதிகள் இந்த நிலையை அடைந்திருக்கின்றன என்று அவர் மேலும் சொன்னார். (உ-94)

வட்டக்கச்சி, இராமநாதபுரத்தில்

## சுகாதார உதவியாளர் பற்றுக்குறையால் கஷ்டம்

வட்டக்கச்சி, ஆக 31 வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதியில்கிராமிய சுகாதார உதவியாளர்கள் பற்றுக்குறையால் நோயாளர்கள் - குறிப்பாகக் கர்ப்பிணிகள், மற்றும் குழந்தைகள் - பெரும் கஷ்டம் அனுபவித்து வருகின்றார்கள்.

இப்பகுதியில் சுமார் 16 ஆயிரத்து 300பேர் வசிக்கின்றனர். 3 ஆயிரத்து 500 பேருக்கு ஒருவர் என்ற முறையில் ஆகக் குறைந்தது ஐந்து கிராமிய சுகாதார உதவியாளர்களாவது இப்பகுதிக்கு நியமிக்கப்பட வேண்டும்.

போதியளவு கிராமிய சுகாதார உதவியாளர்கள் இல்லாத காரணத்தால் அவசர சிகிச்சைக்காக இப்பகுதி மக்கள் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டியதாயிருக்கிறது. அதுவும் சுமார் 8 தொடக்கம் 9 மைல் தூரம் பழுதடைந்த பாதையில் - செல்ல வேண்டியிருப்பதால் நோயாளர்கள் பெரும் சிரமத்துக்கு ஆளாகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே தங்கள் பகுதிக்கு ஆகக் குறைந்தது மேலும் இரண்டுகிராமிய சுகாதார உதவியாளர்களை நியமிக்கவேண்டும்என இப்பகுதிப் பொதுமக்கள் சார்பில் வேண்டுகோள் விடுக்கப் பட்டிருக்கிறது. (உ-ரி)

## படம் பிடித்தவருக்கு ஏற்பட்ட கதி!

கொழும்பு, ஆக 31 அமைச்சர் ஹமீது பல்கலைக்கழக மாணவர்களுடன் நடத்திய மாநாட்டை படம் எடுத்தவர், அமைச்சரின் முன் கொண்டு போய் நிறுத்தப்பட்டார்.

அவரிடமிருந்த கமராவை அமைச்சர் வாங்கி, அதனுள் இருந்த பிலிம் சுருளை எடுத்துக்கொண்டார்.

அந்த நபர் தான் அரசின் தேசிய புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் என்பதை அமைச்சர் முன் வெளியிட்டார்.

அமைச்சர் கூட்டிய இம் மாநாடு கடந்தவெள்ளி நடந்தது. உபவேந்தர்களும்மாநாட்டில் கலந்து கொண்டனர். (ஒ-எ)

ரூ. 50 ஆயிரம் செலவில்

## தருமபுரம் ஆஸ்பத்திரி திருத்தப்பட்டது

கிளிநொச்சி, ஆக 31 தருமபுரம் அரசினர் வைத்தியசாலைக் கட்டடங்கள் திருத்தப்பட்டிருப்பதுடன் ஆஸ்பத்திரிக்குத் தண்ணீர்வசதியும் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக புதிய மின்சார நீர் பம்பி ஒன்று வழங்கப்பட்டுள்ளதுடன் துருப்பிடித்திருந்த நீர் விநியோகக் குழாய்களும் அப்புறப்படுத்தப்பட்டு பி. வி. சி. குழாய்கள் பொருத்தப் பட்டுள்ளன.

மருந்தகம், வெளி நோயாளர் பகுதி. சிகிச்சைக் களங்கள் என்பனவற்றின் திருத்த வேலைகளும் நடைபெற்றுள்ளன.

இவை அனைத்துக்கும் சுமார் 50 ஆயிரம் ரூபா பணம் அரசாங்க அதிபரின் ஒதுக்கீட்டிலிருந்து தருமபுரம்ஆஸ்பத்திரிக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (உ-76)

## ஆங்கிலஆசிரியர் இல்லை

கோப்பாய், ஆக. 31 கோப்பாய் வடக்கு சரவணபவானந்தா வித்தியாலயத்தில் கடந்த ஒரு வருட காலமாக ஆங்கிலம் கற்பிப்பதற்கு ஆங்கில ஆசிரியர்கள் இல்லை.

இதனால் ஜீ.சி.ஈ(சாதாரண) தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பெரிதும் சிரமப்படுவதாகப் பெற்றோர் கவலை தெரிவித்தனர். (உ-72)

பாஷையூர்,கொழும்புத்துறை நாவாந்துறை பகுதிகளைசேர்ந்த

## யாழ். கரையோர மீனவருக்கும் நிவாரணம்பெற்றுத்தரக்கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 31 இரவு நேர மீன்பிடித் தடை, கடல் வலயம் போன்ற பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்டிருக்கும் யாழ்ப்பாணக் கரையோர மீனவக் குடும்பங்களுக்கும் யாழ் செஞ்சிலுவைச் சங்கம் வழங்கும் உணவுப் பொருட்களைப் பெற்றுத்தர ஆவன செய்யுங்கள்.

-பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்க சனசமூகநிலையத் தலைவர் திரு. எஸ். கே. செபஸ்தியம்பிள்ளை யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் இப்படி வேண்டுகோளை விடுத்துள்ளார்,

இரவுநேர மீன்பிடித் தடையால் கஷ்டமுறும் 16, 450 மீனவக் குடும்பங்களுக்கு யாழ். செஞ்சிலுவைச்சங்கம். உணவுப் பொருட்களை வழங்கவிருக்கின்றது.

செம்பியன்பற்று, பருத்தித்துறை, தொண்டமானாறு,மயிலிட்டிக்கரை காங்கேசன்துறை, கீரிமலை, மாதகல், குருநகர் ஆகிய பகுதிகளில் உள்ள 16, 450 குடும்பங்களுக்கே இந்த உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

பாஷையூர், கொழும்புத்துறை, நாவாந்துறை மீனவர்களுக்கும் மீன்பிடித்தடையால் பாதிப்புஏற்பட்டுள்ளது.

ஆனால் இக்குடும்பங்களுக்கும் செஞ்சிலுவைச் சங்க உணவுப் பொருட்கள் வழங்கப்படுவது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இதனைச் சுட்டிக்காட்டி இப்பகுதி மீனவக் குடும்பங்களும் யாழ். செஞ்சிலுவைச்சங்கம் வழங்கும் நிவாரணப்பொருட்களைப் பெற்றுத்தரும்படி தற்போது வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. (உ-5)

## சேதமுற்ற மின்கம்பங்கள் மாற்றப்படும்

கோப்பாய், ஆக 31 கோப்பாய்ப் பகுதியிலுள்ள சேதமடைந்திருக்கும் மின்கம்பங்களுக்குப்பதிலாக புதிய மின்கம்பங்கள் விரைவில் நடப்படும் என உதவி அரசாங்க அதிபர் க. குலேந்திரா தெரிவித்தார். (உ-72)

## 6ஆம் மாத கண்ணீர் அஞ்சலி

திருமதி நடராஜா சிவபாக்கியம்

தோற்றம்: 04 - 03 - 1919 மறைவு: 04 - 03 - 1988

எனது குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எமக்கெல்லாம் வழிகாட்டிய அன்புத்தாயே! நீங்கள் மறைந்து ஆறுமாதங்கள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் இதயத்தை விட்டு என்றும் அகலா!


உமது ஆத்மா சாந்தி அடைய அம்பாளைப் பிரார்த்திகின்றோம்.

உமது பிரிவால் வாடும்:

அன்புக் கணவன்,
S. A. நடராஜா.
மற்றும் சகோதரன், மருமகன்,
உறவினர்கள்.

''சிவராஜ் தி''
புத்தூர் கிழக்கு, புத்தூர். (6049)

# 100 ஆவது நாள் நினைவஞ்சலி



வேலுப்பிள்ளை - நகுலேஸ்வரன்
(தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர்)
கப்டன் (குழந்தை) நகுலன்

தாயக மண்ணில்: 30 - 11 - 1966 ● தமிழீழ மண்ணில்: 24 - 05 - 1988

அடிமைத்தனத்தின் விலங்கினை உடைக்க
உறுதி கொண்டெழுந்த வீரவேங்கையே — நகுலா
தமிழீழப் பயிருக்கு கல்நகர் மண்ணிலே
உரமாகிய் இன்று நூறாவது நாளாகி விட்டது
எம் மண்ணுக்காய் மரணித்த மாவீரனே
செந்தமிழ் சிந்தும் இரத்தத்தால்
சிவந்து கொண்டிருக்கும் தமிழீழ மண்ணை மீட்டெடுக்க
சுதந்திர தமிழர் கொடியை — எம்
தாயகத்து மண்ணிலே பறக்கவிட
மறுபிறப்பெடுத்துப் போராட இம்மண்ணில்
நீ மறுபடியும் பிறக்க வேண்டும்
இது தான் எங்கள் பிரார்த்தனை!

-நாவற்குழி வாழ் நண்பர்கள்-

''எங்கள் மக்களைக் காத்திட ஆயுதம்
ஏந்துவேன் நான் மீளவும்''- கப்டன் நகுலன். (6048)

## கண்டெடுக்கப்பட்ட அடையாள கார்ட்டுகள்

யாழ்ப்பாணம், ஆக 31 கண்டெடுக்கப்பட்ட அடையாள கார்ட்டுகள் சாரதி லைசென்ஸ் என்பன பொது மக்களால் 292/2, நாவலர் வீதியில் உள்ள உதயன் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் நேரில் வந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

297820354V சிதாலெட்சுமி சம்பந்தமூர்த்தி, யாழ்ப்பாணம்.
528360122V இராசம்மா சபாபதி, இடைக்காடு.
546312810X சின்னத்தம்பி சரோஜினிதேவி, ஏழாலை.
271315066V செல்லப்பா பெரியதம்பி, ஒத்தாச்சிமடம்.
280100412V சின்னத்தம்பி கணேசு, கரவெட்டி.
596032290V பரிமேல் அழகனார் வசந்திரா தேவி, கரவெட்டி.
472922734V சிவசுப்பிரமணியம் சேசானந்தன், ஹெந்தலை.
385660618V சிவமணி சண்முகம், வரணி வடக்கு.
593021912X கோவிந்தசாமி சுந்தரலிங்கம், லபுக்கலைய.
506320348V மனோராணி சுந்தரலிங்கம், தெல்லிப்பளை
623211223V திருநாவுக்கரசு திருலோகநாதன் சுன்னாகம்.
431462460V செங்கோல் பன்னீர்ச்செல்வம், வேலணைகிழக்கு.
4674711602X சருணசரன் ஆனந்தவள்ளி, உப்புவெளி.
548664020V செல்வரத்தினம் மேரிஅன்னம்மா, வயாவிளான்.
413401283V இராசையா சுந்தரம், வல்வெட்டி.
277183706V செய்தூன் சேகுஜலாகுதீன், அல்லைப்பிட்டி.
222161630V ஆறுமுகம் சின்னத்துரை, கொழும்பு.
715090244V பிரான்சிஸ் சேவியர் பிறீடா, குருநகர்.
651921953V தம்பிப்பிள்ளை [illegible], எருவில்.
[illegible] ஆறுமுகம் அன்ரன்போல், குருநகர்.
660721533V பரராசசிங்கம் முருகானந்தராசா, அளவெட்டி.
483242018V சுந்தரம் வேலாயுதபிள்ளை, நல்லூர்.
651651786V கிறிஸ்தோபர் தேவதாஸ், குருநகர்.
53292776X மயில்வாகனம் மகேந்திரன் கோப்பாய்.
651353360V செந்தில்வேல் பாலச்சந்திரா முரசுமோட்டை.
666632702V நடராசா வையந்திமாலா, தாளையடி.
570552074V மயில்வாகனம் யோகலிங்கம், காரைநகர்.
438391606V அமிர்தநாயகி அலெக்சாண்டர், கொழும்பு - 13.
571923190 V கந்தையா யோகபரமேஸ்வரன், நெடுங்கேணி.
536212132 X புவனேஸ்வரி கந்தையா, யாழ்ப்பாணம்.
547890167 X ஆரியமுத்து புஸ்பலீலா, மாத்தளை.
302591814 X அருணாசலம் வேலாயுதம் கொழும்பு - 7.
682571551 V அமிர்தநாதன் அல்போன்ஸ் அமிர்தராசா, திருகோணமலை.
271621620 V ஐயாத்துரை வடிவேலு, சோனகவீதி.
408152747 X சத்தியபாமா தில்லைநாதன், யாழ்ப்பாணம்
550370409 X நா.சுந்தரலிங்கம், பரந்தன்.
561242763 V சின்னத்துரை செல்வராசா, கோண்டாவில்.
451981719 V கந்தையா பரமேஸ்வரன், சுருவில்.
435691595 V கணேசன் செண்பகவல்லி, கொழும்பு- 2.
421382581 X ஐயம்பிள்ளை கணேசன். கொழும்பு.

சாரதி லைசென்ஸ்

294264 சிவசுப்பிரமணியம் பாலசேகரம், வல்வெட்டித்துறை.
002837, கோணலிங்கம் புவனேந்திரம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி முத்துத்தம்பி நாகம்மா

மலர்வு: 08 04-1922 உதிர்வு: 1-08-1988

நாட்கள் பலவானாலும்
ஆண்டுகள் பலவானாலும்
நீங்கள் நேசித்த
உயிர்கள் உங்களை
என்றும் மறவாது!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அணிஞ்சியன்குளம்,
(மல்லாவி) யோகபுரம். (6004)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி கனகம்மா சின்னத்தம்பி

இன்பத்திலும் துன்பத்திலும் உறுதுணை புரிந்து என் இதயத்தை விட்டு நீங்காத என் அன்புள்ளமே! அருமை மனைவி கனகமே! ஐயா, ஐயா என அடிக்கொருதரம் கூறும் குரல் இன்று என்னை ஐயகோ என தவிக்க விட்டுச் சென்றதுவோ?

அம்மா அம்மா என்று பரிவுடனும் பாசத்துடனும் அழைக்கும் அன்பான வார்த்தையை எம்மிடமிருந்து பறித்துக் கொண்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அருமைத் தாயே! ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறாது எம்மனது. மாறாது உங்கள் ஒளி முகம். என்றும் எங்கள் உள்ளங்களில் உலாவி வருவீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

கணவன், மக்கள்,
மருமக்கள்.

107, பலாலி வீதி,
கந்தர்மடம்.

(6073)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துதவும்
நல்லாள் உடையது அரண்.

**பொருள்:**

(தன்னிடம் உள்ளவர்க்கு வேண்டிய) எல்லாப் பொருளும் உடையதாய், போர் நெருக்கடியானவிடத்தில் உதவவல்ல நல்ல வீரர்களை உடையது அரண் ஆகும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805, 32073
யாழ்ப்பாணம்.
31-08-1988 த. பெ. இல. 23


# உதவுவாரே இல்லையா?

ஈழத் தமிழ் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளில் காணமற்போவோர் பற்றியதும் ஒன்றாகும். 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ் மக்களிடையே காணமற் போனவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தையும் தாண்டியிருக்கும். அது மட்டுமன்றி நேற்று வரைக்கும் தமிழ் மக்களில் பலர் காணமற்போய்க் கொண்டே இருக்கிறார்கள்!

இலங்கை, சனநாயக நாடு என்று சொல்லிக் கொள்ளப்படுகிறது. சனநாயகம் சரிவரக் கடைப்பிடிக்கப்படும் நாடு ஒன்றில் கைது செய்யப்பட்ட, விசாரணைக்குக் கூட்டிச் செல்லப்பட்ட எவரும் 'காணமற்போய்' விட வேண்டியதில்லை. குற்றவாளியாசச் சந்தேகிக்கப் போதிய ஆதாரங்கள் இருந்தால், நீதிமன்றத்தில் அவர்மீது வழக்குத் தொடரப்படும், இல்லையேல் அவர் விடுவிக்கப்படுவார்.

இராணுவ ஆட்சி வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ நடக்கும் நாடு ஒன்றில் தான், படையினரால் கேள்வி நியாயம் இல்லாமல் கைது செய்யப்படும் பொது மக்கள் "காணமற் போவது" உண்டு.

இலங்கையில் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில், கடந்த பல வருடங்களாக இராணுவ ஆட்சி தான் நடத்தப்படுகிறது. சனநாயகப் பெயர் சூட்டப்பட்ட ஐ. தே. க அரசாங்கம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அவசரகாலச் சட்டம் என்ற இரண்டு பெரும் ஆயுதங்களை வைத்துத் தமிழர்கள் மீது இராணுவ அடக்குமுறை ஆட்சியைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. அதன் பிரதிபலன்களில் ஒன்றே "காணமற் போவோர்" பட்டியல் நீட்டம்.

இப்படி ஒரு பட்டியல் கடந்த சில மாதங்களாகத் தென்னிலங்கையிலும் இயற்றப்பட்டு வருகிறது. அதனால் சிங்கள மக்களும் மறைமுகமான இராணுவ ஆட்சியை இப்போது உணர்கிறார்கள்.

தமிழ்ப் பகுதிகளில் இடம் பெற்ற அண்மைக் கால இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட பல தரப்பாருக்கும் அரசு நிவாரணம் வழங்கி வருகிறது.

புரிந்த பாவத்துக்கு பிராயச்சித்தம் செய்வது போன்றது இது. எனினும் அரசாங்கம் என்ற வகையில் மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டியது கடமை என்ற பெயரால் நிவாரணம் வழங்கப்படுகிறது. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குப் போதிய நிவாரணம் வழங்கப்படுகிறதா என்பது தனியாக ஆராயப்பட வேண்டிய விடயம்.

பாதிக்கப்பட்டவர்களை பல தரப்பாகப் பிரித்து நிவாரணம் வழங்கப்படுகிறது. ஆனல் "காணமற் போனவர்"களின் குடும்பங்களுக்கு எவ்வித நிவாரணமும் வழங்கப்படவில்லை என்று புகார் கூறப்படுகிறது. அரசு அவர்களை மட்டும் ஒதுக்கியது.

நிவாரணம் வழங்கப்படுவோர் பட்டியலில், பாதிக்கப்பட்டோர் பட்டியலில் காணமற் போனவர்களின் குடும்பங்களையும் சேர்த்துக் கொண்டால், தான் செய்த குற்றத்தைத் தானே நேரடியாக ஒப்புக் கொள்வதற்குச் சமமாகி விடும் என்று அரசு நினைக்கிறதா? அஞ்சுகிறதா?

காணமற் போனவர்களின் குடும்பத்தினரும் மனிதர்களே. இந்த நாட்டுப் பிரஜைகளே. குடும்பத் தலைவர் காணமற்போய் விட்டால் அவரது குடும்பம் வாழ்வதற்கு, ஜீவனோபாயத்திற்கு என்ன செய்யும்? குடும்பத் தலைவி பிள்ளைகளைப் பராமரிக்கவும், படிப்பிக்கவும், ஒருநேரக் கஞ்சி ஊற்றுவதற்கும் என்ன செய்வாள்?

இது, மனிதாபிமானத்துடன் நோக்கப்படவேண்டிய ஒன்று. இராணுவம் சுட்டு உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு உதவ முடியுமானல், இராணுவம் கூட்டிச்சென்று காணமற் போனவரின் குடும்பத்துக்கு உதவுவதற்குப் பின்னிற்பதேன்? இந்த அநீதி நீக்கப்படவேண்டும். காணமற்போக வைத்த அநியாயத்துடன், இந்த அநீதியையும் அரசு தனது தலையில் வாங்கிக்கொள்ள வேண்டாமே!

அரசு உதவாவிட்டாலும், தொண்டர் ஸ்தாபனங்கள் இவர்களுக்கு உதவவேண்டும். மனித உரிமையை நிலைநாட்டப் பாடுபடும் ஸ்தாபனங்கள் உதவவேண்டும். இத்தனை பேர் காணமற்போனார்கள் என்று பட்டியல் போடுவதோடு நில்லாமல், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவவும் ஏதாவது செய்யவேண்டும். செய்யும் உதவியை இன்றே செய்ய வேண்டும். காணமற் போனவர்களின் குடும்பங்கள் பெரும் நிர்க்கதிக்கு ஆளாகி அல்லற் படுகிறார்கள்.

ஸ்பெயின், மே.ஜேர்மனி, இத்தாலி அனுமதி மறுப்பு:

# நச்சுக் கழிவுப் பொருள்களுடன் ஆங்கில கால்வாயில் ஒரு கப்பல்!

## பிரிட்டிஷ் துறைமுகத்திற்குள் நுழைய முயற்சி

லண்டன், ஆக. 30

இரண்டாயிரம்மெட்ரிக் தொன் நச்சுக் கழிவுப் பொருள்களுடன் மேற்கு ஜேர்மன் சரக்குக் கப்பல் ஒன்று ஆங்கிலக் கால்வாயில் என்ன செய்வது என்று தெரியாமல் தரித்து நிற்பதாக லண்டனில் அறிவிக்கப்பட்டது.

இக் கப்பல் இத்தாலியில் இருந்து கழிவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு முதலில் நைஜீரியாவுக்குச் சென்றது. அங்கு கழிவுப் பொருள்களை இறக்கிவிட கப்பல் ஊழியர்கள் முயற்சித்தனர்.

அங்கு அகற்ற அனுமதி மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து ஸ்பெயின் மேற்கு ஜெர்மனி, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்குச் செல்ல கப்பல் நிர்வாகம் அனுமதி கோரியது. இந்த நாடுகளும் கழிவுப்பொருளை இறக்க அனுமதி வழங்க மறுத்து விட்டன.

மீண்டும் இத்தாலிக்குத் திரும்ப கப்பல் உரிமையாளர்கள் முற்பட்டனர். இத்தாலியும் அதற்குத் தடை விதித்தது.

இந்த நிலையில் கப்பல் தற்போது ஆங்கிலக்கால் வாயை அடைந்துள்ளது.

பிரிட்டிஷ் துறைமுகம் ஒன்றில் நுழைய கப்பல் முயற்சிப்பதாக பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு அறிவித்தது.

இது குறித்து பிரிட்டிஷ் அரசு இத்தாலிய அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டுள்ளது.

"உலகின் கடல் பகுதியில் நச்சுக் கழிவுப் பொருளுடன் ஒரு கப்பல் அலைந்து திரிவது பெரும் ஆபத்தையே விளைவிக்கும் —இப்படி பிரிட்டிஷ் சுற்றுப்புறச்சூழல் உதவி அமைச்சர் திருமதி பொட்டம்லி தெரிவித்தார். (எ)

### அபராதம்

தமிழ் நாட்டுக்கு அண்மையில் பிரதமர் ராஜீவ் காந்தி விஜயம் செய்திருந்தார் அல்லவா!

அப்போது பிரதமர் சென்ற காரை முந்திக் கொண்டு சென்ற காரின் சாரதியைப் பொலீஸார் கைது செய்து வழக்குப் பதிவு செய்தனர்.

சாரதியின் பெயர் சங்கர். வழக்கு சிதம்பரம் நீதிபதி திருமதி வசந்தா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

விசாரணை முடிவில் பிரதமர் காரை முந்திச் சென்றதற்காக சங்கர் குற்றவாளியாகக்காணப் பட்டார்.

அவருக்கு இந்தியப் பணத்தில் 450ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

# அதிபர் ஸியா விமானத்தைஏவுகணை தாக்கியது!

## அமெரிக்கப் பத்திரிகை தகவல்!!

வாஷிங்டன், ஆக.30

நிலத்தில் இருந்து வானுக்கு ஏவப்படும் ஏவுகணை ஒன்று தாக்கியதால்தான் அதிபர் ஸியா-உல்-ஹக் பயணம் செய்த விமானம் வெடித்துச் சிதறியது என்று வாஷிங்டன் டைம்ஸ் பத்திரிகை நேற்றுச் செய்தி வெளியிட்டது.

பாகிஸ்தான் அதிகாரிகளுடன் சேர்ந்துவிமான விபத்து பற்றி விசாரணை நடத்திய அமெரிக்க அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார் என்று அப்பத்திரிகைச் செய்தி மேலும் தெரிவித்தது

ஸியா மரணம் பற்றி விசாரணை நடத்திய பாகிஸ்தான் அமெரிக்கக் கூட்டுநிபுணர் குழு தனது அறிக்கையை பாகிஸ்தான் பதில் அதிபர் குலாம் இஷாக்கானிடம் கையளித்து விட்டது.

விமானம் வெடித்தது விபத்து அல்ல; சதிவேலையே காரணம் என்று இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

இந்த அறிக்கை அடுத்தவாரம் வெளியிடப்படும் என்று தெரிய வருகிறது.

சதிவேலைக்கு 6 கோஷ்டிகள் காரணமாக இருக்கலாம் என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

அக்கோஷ்டிகள் வருமாறு;

1. 'காட்' என்ற ஆப்கன் அரசின் இரகசிய படையினர்.

2 பாகிஸ்தானில் உள்ள ஈரான் ஆதரவு முஸ்லிம் தீவிரவாதிகள்.

3. ஐந்து பேர் கொண்ட பலஸ்தீனியர் கோஷ்டி விமானம் ஒன்றைக் கடத்தியதற்காக இந்தக் கோஷ்டிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

அதற்காக "ஸியாவைப் பழிவாங்குவோம்" என்று இந்தக் கோஷ்டி அறிவித்து இருந்தது.

4. காடியன் என்ற பிரிவினர் இவர்களுக்கு எதிராக ஸியா சில நடவடிக்கைகளை எடுத்து இருந்தார்.

5 தேசியவாதிகள் கோஷ்டி- இந்தக்கோஷ்டியினர் சிந்துமாகாணத்தில் இராணுவத்திற்கு எதிரான பிரசாரத்தில் ஈடுபட்டுவந்தனர்.

6. பாகிஸ்தான் இராணுவத்தில் உள்ள ஸியா எதிர்ப்பு பிரிவினர்.

நாசவேலை குறித்து குழு 500 பேரிடம் விசாரணை நடத்தியது.

விமானம் வெடித்த அன்று அதிபர் ஸியாவுக்கு மாம்பழப் பெட்டிகளை அன்பளித்தவர்களையும் பாகிஸ்தான் பொலீஸார் கைது செய்து காவலில் வைத்துள்ளனர். (எ)

# யுத்த நிறுத்தம் நீடிப்பு; நிக்கரகுவா அரசு அறிவிப்பு

மனகுவா, ஆக. 30

நிக்கரகுவ அரசு மேலும் ஒரு மாத காலத்துக்கு யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிக்கப் போவதாக அறிவித்திருக்கிறது.

இது 4 ஆவது யுத்த நிறுத்த நீடிப்பு என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நீடிப்பு செப்டம்பர் 30 வரை அமுலில் இருக்கும்.

கொன்ரக் கிளர்ச்சியாளருடன் முதலில் 60 நாள் யுத்தநிறுத்தம் கடந்த ஏப்பிரலில் அமுலுக்கு வந்தது.

அப்போது நிக்கரகுவா அரசு, கொன்ரக் கிளர்ச்சியாளருடன் சமரசப் பேச்சுக்கள் நடத்தியது. ஜூன் மாதம் உடன்பாடு காணப்படாமல் பேச்சுக்கள் முறிந்தன. அதன் பின்னர் நிக்கரகுவா அரசு ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தை நீடித்து வருகிறது.

தாக்குதல் நடத்தாவிட்டாலும் யுத்தநிறுத்தம் என்று கொன்ரக் கிளர்ச்சிக்காரர்கள் அறிவிக்கவில்லை.

சமரசப் பேச்சுக்களை நிக்கரகுவாவில் நடத்த வேண்டும் என்று அரசு கூறிவருகிறது.

வேறொரு நாட்டில் நடத்தும்படி கொன்ரக் கிளர்ச்சிக்காரர்கள் கோரிவருகின்றனர்.

இதுவே இப்போதுள்ள முட்டுக்கட்டை. (எ)

# நீற்றுக்காய்க் குளம் பகுதி நெருக்கமாகச் சுற்றிவளைப்பு

ஒட்டுசுட்டான் ஆக 31

முல்லைத் தீவைச் சேர்ந்த நீற்றுக்காய்க் குளம், கும்பகர்ணன் மலை, ஆண்டான்குளம் பகுதிகளை இந்தியத் துருப்புக்கள் மிகநெருக்கமாகச் சுற்றி வளைத்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பகுதிகளில்தொடர்ந்தும் மோதல்கள் இடம்பெற்று வருவதாக அங்கிருந்து வருபவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை—

புளியங்குளம் சந்தி மாங்குளம் சந்தி, உடையார்கட்டு சந்தி ஆகிய இடங்களில் முட்கம்பி வேலி போடப்பட்டு வீதி தடை செய்யப்பட்டுள்ளது.

உடையார்கட்டு வரை வாகனங்கள் போக்குவரத்துச் செய்கின்றன.

ஒருசிலர் ஒட்டுசுட்டானிலிருந்து நடந்தும் சைக்கிளிலும் யாழ் குடாநாட்டிற்குச் சென்றுள்ளனர்.

இது இவ்வாறு இருக்க உணவுத் தட்டுப்பாடு நாளுக்குநாள் கூடிக்கொண்டிருக்கிறது. விளக்கு ஏற்றுவதற்கு வீடுகளில் மண்ணெண்ணெய் இல்லாமல் காட்டு விறகில்தீ மூட்டி மக்கள் தங்கள் சடமைகளைச் செய்ய வேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாம்

நோயில் பீடிக்கப்பட்டவர்கள் மருத்துவ மனைக்குப் போக முடியாமல் அவஸ்தைப் படுகிறார்களாம். (ஒ-113)

## சமய சந்நிதிகளில்

### 8 ஆவது குருபூசை

யாழ்ப்பாணம் ஆக 31

திருக்கேதீஸ்வரம் திருவாசகம் ஸ்ரீ மத் சபாரத்தினம் சுவாமிகளின் 8 ஆவது குருபூசை இன்று 31 ஆம் திகதி புதன்கிழமை 3 30 மணிக்கு நடைபெறும்.

மேற்படி குருபூசை சுவாமிகளின் சமாதியடைந்த 43/A விதானையார் வீதி சுண்டிக்குளி என்ற இல்லத்தில் நடைபெறும். (சி)

### குப்பிளான் சோதிவிநாயகர் உற்சவம்

யாழ்ப்பாணம் ஆக 31

சொக்கர்வளவு சோதி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாட்கள் வரை நடைபெறும்.

செப்டம்பர் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உற்சவம் முடிவடையும்.

உற்சவம் பிரதி தினமும் மாலை 4.15க்குத் தொடங்கி மாலை 6 30 மணிக்கு முடிவடையும்.

பதினோராம் நாள் எம்பெருமானுக்கு சங்காபிஷேகமும் நடைபெறும். (இ)

### அளவெட்டியில் மஹோற்சவம்

குருநகர், ஆக 31

அளவெட்டி, ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் கடந்த 25 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 2 ஆம் திகதி சஞ்சீவி மலைத் திருவிழாவும், 3 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், உறியடி உற்சவமும் 4 ஆம் திகதி தீர்த்த விழாவும், 5 ஆம் திகதி பூங்காவனமும் நடைபெறும். (உ-51)

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

### கந்தனே, கருணைக் கடலே!

ராகம்:- ஆரபி தாளம்:- ரூபகம்

பல்லவி

குருநாதனே குகனே நல்லூர் நாதனே
குருவே
(குருநாதனே)

அனுபல்லவி

அருள் புரிவாய் உனை நம்பினேனையா
அருள் புரியாயெனில் அந்தோ ஆரெனக்குத்
துணை
கருணைக் கடலே காலகண்டன் சேயே
(குருநாதனே)

சரணம்

சேயே யானுனை நம்பினேன் ஜெகநாதனே
தாயே யல்லயோ நீ தந்தையு மல்லயோ வப்பா
மாய விருளகற்றி மாட்சி தாராது நான்
பேயாய்த் திரிந்தால் பெருமையோ வுனக்கு
(குருநாதனே)

டாக்டர் நா. கனகரத்தினம்.

# இந்தியாவிடம் மாற்றுத்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தோன்றித்தனமாக முடிவு எடுக்க முடியாது. அதற்கு மக்கள் பிரதிநிதிகள் தேவை. அப்பிரதிநிதிகள் மூலம் அதனைத் தீர்மானிக்கமுடிவேண்டுமென்பதற்காகவே தேர்தல் நடைபெற வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்திருக்கிறோம்.

ஆயுதபாணி நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவரவும், வடக்கு கிழக்கு சிவில் நிர்வாகச் சீர்குலைவு, சமூக,பொருளாதார, அரசியல் நிலைமைகளை ஒழுங்குபடுத்தவும் இத்தேர்தல் அவசியமகிறது.

எமது பகுதியின் புனர்வாழ்வு அலுவல்களைத் துரிதப்படுத்த மாகாண சபை இயங்கவேண்டியது மிகஅவசியமானதாகும்.

### தவறான அணுகுமுறை

இலங்கை-இந்திய ஒப்பந்தம் முழுமையாக நிறைவேறத் தவறியமைக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் மட்டும் காரணம் என நாம் என்றும் சொல்லியதில்லை. காரணமானவர்கள் பட்டியலில்இலங்கை-இந்திய அரசுகளையும் குறிப்பிட வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இதற்குக் காரணமாக அமைய பிரதான ஏதுவாக இருந்தது இரு அரசுகளினதும் அணுகுமுறைகள்தான் குறிப்பாக இந்தியாதான்.

இந்தியாவின் அணுகுமுறையால் தமிழீழ விடுதலைப்புலிகள் ஒப்பந்தம் நிறைவேறாமல் செய்ததற்கு பிரதான காரணிகளாக மாற்றப்பட்டனர்.

இந்தியாவை நாம் நட்பு சக்தியாக கருதும் வேளை இத்தவறுக்கான குற்றச்சாட்டுக்களையும் சுமத்துகின்றோம்.

### மாற்று வழி

இந்நிலையில் இந்தியா தமிழீழ விடுதலைப்புலிகளை மையமாக வைத்து சிந்திக்காமல் மாற்று வழிகளைக் கையாள வேண்டும். இல்லையேல் தொடர்ந்தும் இந்தியா தவறு செய்வதாகவே அது அமையும்.

இலங்கை அரசின் தன்னிச்சையான போக்குகளுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் காரணம் எனக் கூறி இந்தியா மௌனம் சாதிப்பது தவறு.

இலங்கை அரசின் தவறான போக்குகளைத் [illegible] தம் மூலம் இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது.

அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படாமலிருப்பது எமக்கு வேதனை தருகிறது.

இவ்விடயத்தில் மேல் நடவடிக்கை எடுக்கும் நிலையை இரு அரசுகளும் ஏற்படுத்தாமலிருப்பது எமக்குக் கவலை தருகிறது.

இதனை இந்தியா முழுமையாகவும், விரைவாகவும் நிறைவேற்றவேண்டுமென இந்தியாவைக் கோருகின்றோம்.

தேர்தல் இடாப்பு 1982 ஆம் ஆண்டு குடியிருப்பாளர் இடாப்பு அடிப்படையில், 1987 ஆம் ஆண்டிற்குரியதாக அமைய வேண்டும்.

முஸ்லிம், தமிழ் அமைப்புக்கள் உட்பட மக்கள் பிரதிநிதிகள் எனக் கூறிக்கொள்ளும் யாருடனும் இப்போதைக்குபேச்சுவார்த்தை செய்ய நாம் தயார் இல்லை.

மக்கள் பிரதிநிதிகள் என தீர்மானித்த பின்பு தான் பேச்சுவார்த்தை நடத்துவோம்.

எம்மைப் பொறுத்தவரை தேர்தலை சந்தித்[illegible] வணங்குவோம்-என்றார். (உ-21)

# பாதுகாப்பு வரி விதிக்க உலக வங்கி சிபார்சு

## குட்டை உடைக்கிறார் றொனி

கொழும்பு, ஆக 31

ஐந்து சதவீத பாதுகாப்பு வரி விதிக்கும் படி உலக வங்கி இலங்கை அரசுக்குத் தெரிவித்துள்ளது.

இத் தகவலை முன்னாள் நிதி அமைச்சர் றொனி டிமெல் நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் வெளியிட்டார்.

"நான் நிதி அமைச்சராக இருந்த போது உலக வங்கி இந்த யோசனையை என்னிடம் தெரிவித்தது.

அந்த வரி விதிக்கப்படுவதை நான் தவிர்த்து விட்டேன்.

இப்போதுள்ள நிதி அமைச்சரை உலக வங்கி இவ்வரியை விதிக்கும்படி கோரியிருக்கிறது.

இரண்டு வாரங்களுக்குத்தேவையான பொருள்களை இறக்குமதி செய்யவே அரசிடம் தற்சமயம் உள்ள கையிருப்புப் போதுமானதாக இருக்கிறது

அடுத்த மார்ச் மாதத்தில் சர்வதேச நாணய சபை புதிய கடன் உடன்படிக்கை ஒன்றுக்கு உடன்படாவிடின், நாட்டில் உணவுப்பற்றுக் குறையும் தட்டுப்பாடுமே ஏற்படும்."

-இப்படி திரு. றொனி டி மெல் தெரிவித்தார். (உ-எ)

### மினி சினிமா காரியாலய திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஆக. 31

யாழ் மாவட்ட மினி சினிமா சங்கக் காரியாலயம் ஒன்று எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு திறந்துவைக்கப்படும்.

யாழ் மணிக்கூண்டு வீதி 42/2 இலக்கத்தில் இந்த சங்கக் காரியாலயம் திறந்து வைக்கப்பட உள்ளது.

பிரஸ்தாப காரியாலயத்தை யாழ் மாநகர ஆணையாளர் திரு சி. வீ. கே. சிவஞானம் திறந்து வைக்க யாழ் மினி சினிமா சங்கத் தலைவர் செ. வசீகரன் மங்கள விளக்கேற்றி வைப்பார். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
• தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
• நெகட்டிவ் [PROCESSING] செய்தல் இலவசம்
• சிறப்பான வர்ண நிழற்படச்சுருள்கள்
KODAK FUJI KONICA
TUDOR FORTE B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# உதயன்

31 - 08 - 1988 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள்
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



**ந. ராஜன்**
**(பிரேமானந்தன்)**
**(கப்டன் அனஸ்)**
தாயின் மடியில்:
28—11—65
அநியாய அழிப்பு:
3—3—88

மண்ணினை
மீட்பதற்கான
உமதரிய பணியிலே
வீரமரணம் எய்தி
விண்புகழ்அடைந்த
வீரத்தலைவனே
நீ இன்று
அழியவில்லை
போராடும்
இளைஞரோடும்
விடுதலை
பெறத் துடிக்கும்
மக்களோடும்
என்றும்
வாழ்கின்றீர்கள்
உனது சுவடுகள்
முன்னேறுகின்றன.

பெற்றோர்,
சகோதரர்கள்,
உறவினர்,
நண்பர்கள்.
(6250)

முல்லைத்தீவு தொடர் ஊரடங்கால்

# வவுனியாவில் பயணிகள் பரிதவிப்பு

## கடந்த புதனன்று 3 மணி நேரம் தளர்வு

வவுனியா, ஆக. 31 கடந்த 21ஆம் திகதி முதல் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமுல் செய்யப்பட்டுள்ள காலவரையறையற்ற ஊரடங்கு கடந்த புதன்கிழமை 3 மணித்தியாலங்கள் மட்டும் தளர்த்தப்பட்டு தொடர்ந்தும் அமுல் செய்யப்பட்டு வருகின்றது.

விடுதலைப்புலிகளின் தலைவர்களையும் அவர்கள் மறைந்துள்ளதாகக் கூறப்படும் முகாம்களையும் சுமார் 20 ஆயிரம் படையினர் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியும், தாக்குதல்களை மேற்கொண்டும் வருவதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இது தொடர்பாக உத்தியோகபூர்வமான கருத்துக்கள் எதுவும் புலிகள் தரப்பில் இருந்து கிடைக்கவில்லை.

இதே வேளையில் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக முல்லைத்தீவு மாவட்டம் அயல் மாவட்டங்களுடன் தொடர்ந்து துண்டிக்கப்பட்டுள்ளமை காரணமாக வெளி மாவட்டங்களில் இருந்தும் தென்பகுதியிலிருந்து முல்லைத்தீவு நோக்கிச் செல்வதற்காக வந்த சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட பயணிகள் வவுனியாவில் தவிக்கின்றார்கள்.

இவர்கள் அனைவரும் வவுனியாவில் உள்ள தமது உறவினர்கள், நண்பர்களது வீடுகளில் தஞ்சமடைந்துள்ளார்கள்.

### இ. போ. ச. பஸ்கள் முள்ளியவளையில்

இதனிடையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஊரடங்கு அமுல் பற்றி அறியாமல் ஊரடங்கு வேளையில் பயணத்தைத் தொடர்ந்த இ.போ.ச. பஸ்களும் அதில் பயணம் செய்தவர்களும் முள்ளியவளை விவேகானந்தா கல்லூரியிலும், அதன் அயலிலும் கடந்த பல நாட்களாகத் தங்கியுள்ளதாக வவுனியாவுக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளிலும் போக்குவரத்துத்தடை செய்யப்பட்டு ஊரடங்கு அமுல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஒருவாரகாலமாக முடப்பட்டுக் கிடந்த நெடுங்கேணி நகரக் கடைகள் கடந்த ஞாயிறன்று மீண்டும் திறக்கப்பட்டபோது படையினர் அங்கு வந்து அவற்றை மீண்டும் மூடும்படி உத்தரவிட்டனராம். அது மட்டுமன்றி பலர் படையினரின் தாக்குதலுக்கு உள்ளனதாக அங்கிருந்து காட்டுவழியாக உணவுப் பொருள்களைப்பெறுவதற்காக வவுனியாவுக்கு வந்தவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

### விவசாயம் பாதிப்பு

நெடுங்கேணியின் மேற்கு தெற்குப் புறங்களைச் சூழவுள்ள கிராமங்களிலும் வடக்கு கிழக்கு பகுதிகளைச் சூழவுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த கிராமங்களிலும் விவசாய முயற்சிகள் யாவும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

விவசாயப் பிரதேசமான இப்பகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான விவசாய கிராமங்களில் நெல் அறுவடையும் தோட்டச் செய்கைகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

நெடுங்கேணியின் கிழக்கு வடக்குப் பகுதியில் உள்ள காடுகளிலும் தண்ணீரூற்று, முள்ளியவளை, குமுழமுனை, அலம்பில், ஆண்டான்குளம், நித்திக்காய்க்குளம் ஆகிய பகுதிகளிலும் அடர்ந்த காட்டுப்பகுதிகளிலும் தீவிர தேடுதலும் பலத்த மோதல் சம்பவங்களும் இடம்பெற்று வருவதாகவும் கிராமவாசிகள் தமது கிராமங்களிலுருந்து வெளியேற இயலாதவாறு படையினர் சுற்றிவளைத்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### கண்ணிவெடி

இது இவ்வாறிருக்க, கடந்த வெள்ளிக்கிழமை நைனமடு இந்திய இராணுவ முகாமிலிருந்து நெடுங்கேணி நோக்கிச் சென்ற படையினரின் வாகனம் ஒன்று கண்ணிவெடியில் சிக்கி சேதமுற்றது. இதில் இரு படையினர் பலியானதாகவும் 2 பேர் காயமடைந்ததாகவும் சொல்லப்பட்டது.

தொடர்ந்து இடம்பெற்ற தேடுதலில் நால்வர் கைதுசெய்யப்பட்டு விசாரணையின் பின்னர் சனிக்கிழமை விடுவிக்கப்பட்டனர்.

நால்வரும் பலத்த காயங்களுடன் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மதியாமடுவைச் சேர்ந்தவெள்ளசாமி(35) நைனமடுவைச் சேர்ந்த ஐ. காளிமுத்து (54) பொ. நவரெட்னம் (27) ஆகியோர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

(ஒ-164-126)

### பூஸா உண்ணா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னின் நிலை மிகக் கவலைக்கிடமாக இருப்பதாகவும் "கோமா" நிலை (தொடர் மயக்க நிலை) ஏற்படக் கூடிய அபாயம் தோன்றியுள்ளதாகவும் அறிய வந்துள்ளது

மற்றைய இருவரும் நடை தளர்ந்த நிலையிலும், சோர்வடைந்த நிலையிலும் எதுவும் பேச முடியாத நிலையில் இருக்கின்றனர்.

இரண்டாம் கட்ட உண்ணாவிரதிகளும் கண் நோயினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### ஞாயிறன்று..:

(1ம் பக்கத் தொடர்ச்சி)


படும்.

அவசிய திருத்தவேலைகளின் நிமித்தமே இந்த மின்தடை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த மின் விநியோகத்தடையினால் மின் பாவனையாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்கு இலங்கை மின்சார சபை வருத்தம் தெரிவித்துக் கொண்டுள்ளது.

(ஒ-9)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



**சுப்பிரமணியம் தனபாலன்**
**(பாபுஜி, சாளி)**

தோற்றம்: 9-11-1962 — மறைவு: 18-07-1988

திடீரென எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட எமது செல்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் உயிரினைக்காக்க போராடிய யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர்ளுக்கும், ஊழியர்களுக்கும், எமது நன்றிகள்.

அன்னாரின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டு உதவிய உறவினர்களுக்கும், அயலவர்களுக்கும், நண்பர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும், மலர் வளையங்களைத் அணிவித்தவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பெற்றோர், சகோதரர்கள்
424 1/1 கில்னர் லேன்,
யாழ்ப்பாணம்.
(6086)

## காப்புறுதி....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தால் 200க்கு மேற்பட்ட முகவர்கள் வருமானம் இழந்துள்ளனர்.

வாடிக்கையாளர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய பல லட்சம் ரூபா பணம் கொடுக்கப்பட முடியாத நிலையில் முடங்கிக் கிடக்கின்றது.

யாழ் கச்சேரி இயங்குவது போன்று மாதம் ஒரு வாரமாவது இயங்குமாறு எம்மிடம் தெரிவிக்கப்பட்டது.

அதுவும் சாத்தியப்படாத நிலையிலேயே யாழ். காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைத் தற்காலிகமாக மூடி விட்டு ஊழியர்களைக் கொழும்புக்குஇடமாற்றம் செய்ய முடிவு எடுக்கப்பட்டது.

இப்படி அவர் கூறினார். (இ-10)

## தற்போது தேர்தல்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் தமிழ் பேசும் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளை தீர்க்க முடியும் என்று இந்திய அரசு தான் கருதுவதாக இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் உள்ள விடயங்கள் தெரிவிக்கின்றன

### கேலிக்கூத்தாக்கும்

ஆனல் நாம் கூறுவது; உண்மையில் தற்பொழுது நடக்க இருக்கும் தேர்தல் என்பது இப்போதைய நிலையை மேலும் சிக்கலாக்கி ஜனநாயக நடைமுறை கேலிக் கூத்தாக்கும் சூழ்நிலைக்கு கொண்டும்செல்லும் என்பதுதான்.

சகல தமிழ் பேசும் மக்களும் தமிழர் தாயகம் என்ற நிலைப்பாட்டில் இப்போது உறுதியாக இருக்கிறார்கள். தேர்தல் நடத்தப்படுமானால், வடக்கு-கிழக்கில் உள்ள பிரதேச வாதம் மேலும் அதிகரிக்கப்பட்டு, கிழக்கில் தமிழ்—முஸ்லிம் கலவரங்கள் மேலும் விரிவாக்கப்பட்டு ஒன்றிணைந்த தமிழர் தாயகம் என்ற நிலைப்பாட்டுக்கு எதிரான சூழ்நிலையை உருவாக்கும்.

அதாவது இலங்கை-இந்திய ஒப்பந்தம் மூலம் தமிழர்களுக்கான தாயகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்ற நிலைப்பாடு அதே ஒப்பந்தத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் தேர்தல் வழியாகச் சின்னபின்னப் படுத்தும் என்பது திண்ணம்.

ஏற்கனவே உச்ச நிலையில் உள்ள இயக்க மோதல் மேலும் மோசமடைந்து இனி எப்பொழுதுமே ஒற்றுமைக்கு இடமே கிடையாது என்ற நிலைக்கு இத்தேர்தல் கொண்டு செல்லும்.

புலிகளை பழிவாங்க வேண்டும் என்பதற்காக ஒட்டுமொத்தமாக தமிழ் பேசும் மக்களின் அரசியல் எதிர்காலத்தை பணயம் வைப்பது துரோகத்தனம் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

தற்பொழுது நடக்க விருப்பதாகக் கூறும் தேர்தலை நாம் புலிகளுக்கு எதிரான தேர்தலாகப் பார்க்கிறோம். ஆயுதங்களைத் தேடுகிறோம் என்ற போர்வையில் ஏற்கனவே கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கைகளின் ஓர் அரசியல் விரிவாக்கமாகவே நாம் இத்தேர்தலை பார்க்கிறோம். இவ்வாறு திரு. பாலகுமாரன் தெரிவித்தார்.

## சென்னை...

முடிவு செய்திருப்பதற்கு எதிராக தமிழர்கள் ஒன்று திரண்டு குரல் கொடுக்க வேண்டுகின்றேன்.

பிரதமர் ராஜீவின் பொய்ப்பிரசாரத்துக்குப் பதிலடி கொடுத்ததற்காக, விடுதலைப் புலிகளை கைது செய்து தமிழ்ச் சமுதாயத்திற்கு ராஜீவ் விடுத்துள்ள சவாலை தமிழர்களாகிய நாம் ஏற்போம்.

இலங்கையில் இந்திய இராணுவம் தமிழருக்கு எதிராக இழைத்துவரும் கொடுமைகள் பற்றியும் பிரதமர் ராஜீவின் தமிழர் விரோதப் போக்குக் குறித்தும் தமிழக மக்களிடையே அம்பலப்படுத்தும் பணியை நாமே மேற்கொள்வோம்—இவ்வாறு திரு. நெடுமாறன் தமது அறிக்கையில்தெரிவித்திருக்கிறார். (அ-எ4)

## தமிழகம்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காந்தி கௌரவப் பிரச்சினையாக கருதாமல் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்து விடுதலைப் புலிகளுடனும் மற்றவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்த வழிகோலவேண்டும்.

தேவையில்லாமல் தனது மிருகபலமிக்க அதிகார பலத்தைக் காட்டுவதற்காக தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்து இருக்கும் நூற்றுக் கணக்கான ஈழத் தமிழர்களை கைது செய்து சிறையில் அடைத்திருப்பதை கண்டித்து ஆகஸ்ட் 31 புதன் கிழமை (இன்று) அனைத்து மாவட்டத் தலை நகரங்களில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களின் முன்னால் அந்தந்த மாவட்ட இளைஞர் அணியின் சார்பில் அமைதி வழி ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று தலைமைக்கழக அனுமதி முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஒ-எ)

## பூஸா செல்ப...

கப்படும்:

இதனிடையில் பூஸா முகாம் இளைஞர்களின் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவான உண்ணாவிரதம் நேற்று வீரமாகாளி ஆலய முன்றலில் தொடர்ந்து நடைபெற்றது. (ஒ-10)

## புதிய உயர் கல்லூரி

90 ஆம் ஆண்டிற்கான G.A.Q, B.A, 1st in Com.

விரிவுரைகள் ஆரம்பம்: 03-09-88

இதற்கான பல்கலைக்கழக பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினுல் செய்து தரப்படும், விபரங்களை நேரிலும் / தபால் மூலமும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு
S. அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
கிளை
புதிய உயர் கல்லூரி,
மல்லாகம்.
(C-6423)

## வெளிநிலைப் பல்கலைக்கழகக் கல்வி

B. A. - 1988 டிசம்பர்
G. A. Q. - 1989 ஏப்ரல்
அரசறிவியல்
திரு. U. T. தமீம்
ஆரம்பம்: 1-9-88
வியாழன் 9. a. m

BECON
156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C 6440)

## 2ஆவது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 20 - 11 - 1952
உதிர்வு: 24 - 8 - 1986
திதி: 31 - 8 - 1988

**சண்முகசுந்தரக்குருக்கள்**
**சூரியகுமாரன்**
(முன்னாள் ஹட்டன் நஷனல் வங்கி முகாமையாளர்)

சூரியன் உள்ளவரை சூரிய உன் நாமம்
பாரினில் பரிமளிக்கும்
பாமாவின் பெயருடனே
பாரியென வாழ்ந்தாய் பலர்
போற்றப் பணி புரிந்தாய்
ஈராண்டு நினைவலைகள்
இன்றெம்மில் மோதுதடா!

உன் நினைவை நெஞ்சில் நிறைத்த
அம்மா, அண்ணா, அண்ணி,
பிள்ளைகள், உற்றார், உறவினர்.
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
(6077)

## மரண அறிவித்தல்கள்

### சங்கரப்பிள்ளை விசுவலிங்கம்

நயினாதீவு முன்னாள் கிராமசபைத் தலைவரும், பதிவுகாரரும், ஊர்காவற்றுறை—நயினாதீவு பிரபல வர்த்தகரும் காலஞ்சென்ற திருமதி நாகம்மா விசுவலிங்கம் அவர்களின் அன்புக் கணவரும் சபாநாதன் (இளைப்பாறிய குடியேற்றத் திட்ட அதிகாரி), யோகநாதன் (துறைமுக அதிகாரசபை திருகோணமலை), டாக்டர் வேதநாதன், மகேஸ்வரநாதன் (மின் முகாரி சீமெந்துக் கூட்டுத்தாபனம்). திருமதி மீனாட்சி நவநீதகிருஷ்ணன், காலஞ்சென்ற புண்ணியநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தவமணி (ஆசிரியை) சோமேஸ்வரி (ஆசிரியை) நவநீதகிருஷ்ணன் (இளைப்பாறிய வரி உத்தியோகஸ்த்தர்) மாலினி (ஆசிரியை). சொர்ணம்மா (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமனுருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 31-8-88 புதன் கிழமை நயினாதீவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: வி. சபாநாதன்
நயினாதீவு,
(6265)

### பிரம்மஸ்ரீ நா. சிவசாமிக் குருக்கள்

(கரணவாய் தெற்கு)

கரணவாய் தெற்கு பிரம்மஸ்ரீ நாகேந்திர ஐயர் சிவசாமிக் குருக்கள் அவர்கள் காலமாகிவிட்டார். அவரின் ஈமக்கிரியைகள் 31-8-88 புதன்கிழமை காலை (இன்று) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியை கிராய் மயானத்தில் 11 மணிக்கு நடைபெறும்.

தகவல்: குடும்பத்தினர்
(6085)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் [பிறைவேற்] லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 31-08-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Wednesday 31 st August 1988.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org